# கலைஞரும் நானும்

41

**“முத்தமிழறிஞர் கலைஞர், பத்திரிகையாளர்கள் எனில், தனிப் பாசம் காட்டுவார். அதிலும் சிறியவர், பெரியவர் வித்தியாசம் பார்த்ததில்லை. அவர் ஊடக முதலாளியையும் அறிவார், அங்கு பணியாற்றியவர்களையும் அறிவார். அவரின் வாசிப்பு வேகம் வேறு யாரிடத்திலும் பார்க்க முடியாது” என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார், பத்திரிகையாளரும் பேச்சாளருமான இலக்கியா நடராஜன்.**

■ **இலக்கியா நடராஜன்,** பேச்சாளர்



## “நடராஜர் சிதம்பரத்தில் இருப்பது புதுசா?”

“சிவகங்கையில் கவிஞர் மீரா நடத்திய பாரதியார் நூற்றாண்டு விழாவில்தான் கலைஞர் அவர்களை முதன்முதலில் நேரில் பார்த்தேன். அப்போது நான் கல்லூரி மாணவனாக இருந்தேன். ‘என்னுடைய மாணவர், நல்ல பேச்சாளர்’ எனக் கலைஞரிடம் மீரா என்னை அறிமுகம் செய்து வைத்தார். அப்போதே எனக்கு எங்கள் பகுதியைச் சேர்ந்த தி.மு.க. முன்னோடிகள் ‘சிறுகதை மன்னன்‘ எஸ்.எஸ்.தென்னரசு, தா.கி. போன்றோருடன் தொடர்பு இருந்தது.

அதன் பின்னர் சென்னை வந்து, பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருந்தேன். ‘இதயம் பேசுகிறது’ இதழில் அதிகமாக எழுதி வந்தேன். அப்போது அந்த இதழில் கலைஞரின் ‘குறளோவியம்’ தொடர் வந்து கொண்டிருந்தது. அந்த இதழின் துணை ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் சிலருடன் அவ்வப்போது அறிவாலயம் சென்று கலைஞரைப் பார்த்து வருவோம். ஆனாலும், அப்போது நெருங்கிப் பழகும் வாய்ப்பு அமைந்ததில்லை.

### வாசிப்பில் காட்டும் வேகம்

தமிழ்நாடு காவல்துறையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய ரவி ஆறுமுகம் அவர்கள், தேர்ந்த வாசகராகவும் இலக்கிய ஆர்வலராகவும் இருந்தவர். நான் ஊருக்குச் செல்லும்போதெல்லாம், மீரா அவர்களின் பதிப்பகமான அன்னம்- அகரத்தில் இருந்து வாங்கிவரும் நூல்களை அவருடன் பகிர்ந்து கொள்வேன். வாரத்தில் இரண்டு முறையாவது நாங்கள் சந்தித்து உரையாடும் பழக்கம் இருந்தது. அவர் கலைஞரின் எழுத்துகளுக்கு நல்ல வாசகராக இருந்ததுடன், கலைஞரின் நட்பையும் அன்பையும் பெற்றவராக இருந்தார்.

அவர் ஒருமுறை என்னை அழைத்து, கவிஞர் மீராவின் சகோதரர் மீ.மனோகரன் எழுதிய **‘தென் அமெரிக்காவில் சோழர்கள்’** என்கிற நூல் இருக்கிறதா எனக் கேட்டார். அந்த நூல் வேண்டும் என கலைஞர் அவரிடம் கேட்டிருக்கிறார். அவரிடம் இல்லை என்பதால், என்னிடம் கேட்டார். அந்த நூல் பதிப்பில் இல்லாத விவரத்தைக் கூறியதுடன், நூல் ஆசிரியரைச் சந்தித்து அவரிடமிருந்த ஒரே ஒரு பிரதியை வாங்கி வந்து, ரவி அவர்களிடம் அளித்தேன். அவர் அந்த நூலை கலைஞரிடம் அளிப்பதற்காக என்னையும் அழைத்துக்கொண்டு அறிவாலயம் சென்றார்.

கலைஞருடன் பேராசிரியர், ஆற்காட்டார், அண்ணன் துரைமுருகன் ஆகியோர் இருந்தனர். நாங்கள் சென்றதும் ரவி அவர்கள் கலைஞரிடம் நூலை கொடுத்ததுடன், என்னைக் காண்பித்து, இவர் இலக்கியா நடராஜன் எனச் சொல்லி முடிப்பதற்குள், ‘தெரியுமே... இதயம் பேசுகிறது’ எனக் கூறினார். இந்த நூலை மனோகரனிடமிருந்து வாங்கி வந்தது நடராஜன்தான் எனச் சொல்லி வைத்தார்.

### சிதம்பரத்தில் நடராஜர்

தலைவர் மூப்பனார் அவர்களோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டு, காங்கிரஸ் மூத்த தலைவர் சிதம்பரம் அவர்கள் ‘காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை’ என தனிக்கட்சியைத் தொடங்கினார். நான் அவருடன் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக, அந்தப் பேரவையின் தலைமை அலுவலகப் பொறுப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினேன். அப்போது ஒருநாள் ‘சன்’ தொலைக்காட்சியில் பணியாற்றிய நண்பரைச் சந்திப்பதற்காக அறிவாலயம் சென்றேன்.

கலைஞர் அங்கு இருந்த நேரம் என்பதால், கூட்டமாகவும் இருந்தது. அங்கு நின்றிருந்த தா.கி. அவர்கள் என்னை அடையாளம் கண்டு, ‘என்ன இங்கே?’, என்று கேட்டதுடன், எனது கையில் இருந்த நூல்களை வாங்கிப் பார்த்து, இந்த நூல்களை தலைவர் பார்த்திருப்பாரா எனக் கேட்டார். அவை அப்போதுதான் பதிப்பித்த நூல்கள் என்பதால், ‘வாய்ப்பிருக்காது’ என்றேன். ‘சரி, வாங்க தலைவரைப் பார்ப்போம்’ என என்னையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

‘வாய்யா தா.கி.’ என வரவேற்ற கலைஞர், அவருடன் வந்த என்னையும் பார்த்து, தலையாட்டினார். அதில்தான் ஆயிரம் அர்த்தம் இருக்குமே... தா.கி. அவர்களும், இவர் இலக்கியா நடராஜன் எனக் கூறிய போது “யோவ்.. இவரைத் தெரியாதா? என்ன இதயம் பேசுகிறது” எனக் கலகலப்பாக்கினார். நாங்கள் அளித்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தவரிடம், “இவர் இப்போ பத்திரிகைப் பணிகளில் இல்லை, ப.சிதம்பரம்கிட்ட சேர்ந்துட்டாரு” என தா.கி. கூறினார். அவர் அப்படி சொன்ன அடுத்த நொடியே வாய்விட்டுச் சிரித்த கலைஞர், “என்னய்யா தா.கி... நீ என்ன புதுசா சொல்ற. நடராஜர் என்றால், சிதம்பரத்தில் இருப்பது என்ன புதுசா?” எனக் கூற அந்த இடமே சிரிப்பலைகளால் நிறைந்தது.

> **தலைவர் கலைஞரைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்திக்கும் போதெல்லாம், அவரிடம் எனது சித்திரம் ‘இதயம் பேசுகிறது’ என்பதாகவே இருக்கும்.**

### ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்

தலைவர் ப.சிதம்பரம் அவர்களின் 70-வது பிறந்த நாளை முன்னிட்டு “ப.சிதம்பரம்-ஓர் பார்வை” என்கிற நூலை நான் தொகுத்திருந்தேன். அதை கலைஞர் வெளியிட, நடிகர்கள் ரஜினியும் கமலும் பெற்றுக் கொள்வது என முடிவு செய்திருந்தேன். அதற்காக கலைஞரிடம் தேதி கேட்கச் சென்றிருந்தேன். “நிகழ்ச்சி நிரல் என்ன?” என்று கேட்டவர், “என்னய்யா சொல்ற, உன் நிகழ்ச்சிக்கு அவங்க ரெண்டு பேரும் வருவதாகச் சொல்ற, நீ என்ன பாலசந்தரா, பாரதிராஜாவா” என்றார்.

“ஐயா ரெண்டு பேர்கூடவும் நல்ல தொடர்பு உள்ளது. தலைவர் சிதம்பரம் அவர்கள் பற்றிய நூல் என்பதாலும், நூலை நீங்க வெளியிடுவதாலும், வருவதாகச் சொல்லி இருக்காங்க” என்றேன்.

கலைஞர் தேதி அளித்ததுடன், இன்னொரு ஆலோசனையும் அளித்து அந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தைப் பலமடங்கு உயர்த்தினார். தலைவர், “சிதம்பரம் அவர்களின் தாயார் லட்சுமி ஆச்சியை முதல் பிரதி வாங்க வை. அவங்க கையாலயே அவங்க மகனைப் பத்தின புத்தகத்தை வாங்குவது, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் என்கிற திருக்குறள் தெரியும்ல, அந்த மகிழ்ச்சியைக் கொடுய்யா” என்றார்.

### வேட்டி கட்டிய பிரதமர்

அப்போது ப.சிதம்பரம் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார். நிகழ்ச்சியின்போது வரவேற்புரை நிகழ்த்திவிட்டு, பார்வையாளர் வரிசையில் போய் அமர்ந்து கொண்டார். கலைஞரும் மற்ற வி.ஐ.பி.களும் வலியுறுத்தி அழைத்தும் ப.சி., தான் நிகழ்ச்சியை ரசிப்பதாக கீழ் வரிசையிலேயே இருந்தார். அந்த நிகழ்ச்சியில்தான் “ஒரு வேட்டி கட்டிய தமிழன் பிரதமராக வர வேண்டும்” என நடிகர் கமல்ஹாசன் சொன்னது. ரஜினியும் அதை வழிமொழிய, கலைஞர் அதன் அரசியலைப் பன்மடங்கு உயர்த்திவிட்டார். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர்தான் கமலின் ‘விஸ்வரூபம்’ படத்துக்கு தமிழ்நாடு அரசு தடை உள்ளிட்ட நெருக்கடிகளை அளித்தது.

தலைவர் கலைஞரைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்திக்கும் போதெல்லாம், அவரிடம் எனது சித்திரம் ‘இதயம் பேசுகிறது’ என்பதாகவே இருக்கும். அவர் இதயத்தின் அந்த அன்பை நினைக்கும்போதெல்லாம், ‘மாபெரும் வரலாற்று நாயகரின் காலத்தில் நானும் வாழ்ந்தேன், அவரது அன்பைப் பெற்றேன்’ என்பதே எனக்குப் பெருமை அளிக்கிறது.”

...பகிர்வார்கள்

---

## வழக்கறிஞராகும் நீதிபதி!

இந்திய சட்டத் துறையில் பொன்னெழுத்துகளால் எழுதப்பட வேண்டிய பெயர்கள் என்று சொன்னால், அவற்றில் முதல் பத்து இடங்களில் நீதியரசர் முனைவர் எஸ்.முரளிதர் அவர்களின் பெயர் நிச்சயமாக இடம்பெறும். சென்னை உயர் நீதிமன்றத்தில் 1984-ஆம் ஆண்டு வழக்கறிஞராக தன் பணியைத் தொடங்கியவர், 22 ஆண்டு வழக்கறிஞர் அனுபவத்துக்குப் பிறகு 2006-இல் டெல்லி உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாகப் பொறுப்பில் அமர்ந்தார். அதன் பிறகு, 17 ஆண்டுகள் டெல்லி, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய உயர் நீதிமன்றங்களில் நீதிபதியாகப் பணியாற்றி, இறுதியாக ஒரிசா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பு வகித்து, இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பணி ஓய்வுபெற்றார்.

நீதிபதியாக இருந்த காலத்தில், ஓர்பால் ஈர்ப்பாளர்கள் திருமணம் குற்றம் அல்ல, 2020-ஆம் ஆண்டு டெல்லி கலவரங்களில் ஒன்றிய அரசின் பங்கு என முக்கியமான வழக்குகள் பலவற்றில் அறம் சார்ந்து தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் அளித்தவர். 2020-ஆம் ஆண்டு டெல்லி கலவர வழக்கில் இவரது உத்தரவால் சீற்றமடைந்த ஒன்றிய அரசு இவரை இரவோடு இரவாக பஞ்சாப் உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றல் செய்தது. ஒன்றிய அரசின் கோபத்துக்கு ஆளானதால் இவருக்கு உச்ச நீதிமன்ற நீதிபதியாகும் வாய்ப்பும் கிடைக்காமல் போயிற்று. தற்போது இவரை உச்ச நீதிமன்றம், மூத்த வழக்கறிஞராகப் பணி அமர்த்தியிருக்கிறது. நீதிபதியாக இருந்து பல நல்ல தீர்ப்புகளை வழங்கியவர், மீண்டும் வழக்கறிஞராக வருவதால், மேலும் பலருக்கு நீதி கிடைக்கும் என்று நம்பலாம்!

---

## :ப்ளாஷ்பேக்



### அறுபதாம் ‘பச்சை’!

என் தாத்தா பாட்டி எம்.ஆர்.கோவேந்தன்-கண்ணம்மாள் இணையரின் 60-ஆம் ஆண்டு திருமண நிகழ்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், 1993-ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று சென்னை கோபாலபுரம் இல்லத்தில் நடைபெற்றது. ‘கழகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நேரத்திலும் இப்படியான நிகழ்ச்சியில் தலைவர் குடும்பத்தோடு கலந்துகொண்டார்’ என்று தாத்தா நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். மேலும் கலைஞர் 90 களின் தொடக்கத்தில் அணிந்திருந்த பச்சை நிற மேல்துண்டையும் இதில் காண முடியும். தாத்தாவைத் தொடர்ந்து அப்பா, அவருக்குப் பின் நான் என்று இன்று வரை கழகப் பணியாற்றி வருகிறோம்.



ராமசாமி

**-எம்.ஆர்.ஜி.வி.ராமசாமி,**
**கிளை இளைஞரணி அமைப்பாளர்,**
**முடச்சிக்காடு, தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்


### கலைஞர் நடித்த நாடகம்

**1950-ஆம் ஆண்டுகளில் கழகத்தின் பிற எழுத்தாளர்களின் நாடகங்கள் நடிக்கப்படுவதற்கு முன்பாக அறிஞர் அண்ணாவின் நாடகத்துக்குப் பிறகு, கலைஞரின் நாடகமான ‘வேதனைக் குரல்’ தான் முதன்முதலாக செங்கல்பட்டு மாவட்ட தி.மு.க.வுக்காக வாலாஜா பாத், ராஜா திரையரங்கில் நடிக்கப்பட்டது. இந்த நாடகத்தில் கலைஞர், புலவர் குழந்தைய்யா, கவிஞர் வில்லாளன், சி.வி.எம். அண்ணாமலை, கே.டி.எஸ் மணி, அரங்கண்ணல் ஆகியோர் நடித்தனர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

277




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.